# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 119/2011

சாட்சி : PW1

பெயர் : ஜெயகோபால் தேதி: 01-02-2024

**<u>2 முதல் 5 மற்றும் 11, 12 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் இந்த வழக்கின் 1ம் வாதி என்றால் ஆமாம். 2ம் வாதி என்னுடைய உறவினர் அல்ல. தொழில் முறையில் அவர் எனக்கு பழக்கம். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஜவுளி தொழில் 30 வருடங்களாக செய்து வருகிறேன். 2008ம் வருடத்தில் என்னுடைய வருட வருமானம் சுமார் ரூ. 10,00,000/-. நான் முறையாக வருமான வரி கணக்கு தாக்கல் செய்து வருகிறேன். என்னுடைய வரவு செலவுகளை வங்கி பரிவர்த்தனைகள் மூலம் செய்து வருகிறேன் என்றால் ஆமாம். 2 முதல் 5 பிரதிவாதிகள் ஈரோடு, தருமபுரி போன்ற அருகில் உள்ள மாவட்டங்களில் வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதியின் வாரிசுகளாக 11 மற்றும் 12 பிரதிவாதிகளை இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். தாவா சொத்து பூர்வீகமாக ஆதியில் பழனியப்பன், செல்லாயிக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். பின்னர் அந்த சொத்து பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் மூலமாக 4 ஏக்கர் 26 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். பழனியப்பன் இறந்த பிறகு செல்லாயி 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஒரு தான செட்டில்மெண்ட் மூலமாக எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை பார்த்தேன். அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதியின் கணவர் லட்சுமணன் மூலமாக தாவா சொத்தின் விவரம் பற்றி தெரிய வந்தது. லட்சுமணன் உடன் சென்று தாவா நிலத்தை பார்த்தேன் என்றால் ஆமாம். 2ம்

வாதிக்கு லட்சுமணன் 40 வருடங்களாக குடும்ப நண்பர். சித்துராஜ் என்பவர் தாவா நிலத்தை காண்பித்தார். சித்துராஜ்–ம் என்னுடைய வழக்கறிஞரும் கூறியதால் தாவா நிலத்தை வாங்க முடிவு செய்தேன். தாவா நிலத்திற்கு அருகில் உள்ள நபர்கள் பற்றி எனக்கு தெரியாது. தாவா 2 வது அயிட்ட சொத்து பழனியப்பக் கவுண்டர் உயிலின் மூலம் அவருடைய மகள்களுக்கு எழுதி வைத்த சொத்து. வா.த.சா.ஆ–A1 கிரய உடன்படிக்கை மற்றும் வா.த.சா.ஆ–A2 பொது அதிகார பத்திரம் எனது வழக்கறிஞர் சிவக்குமார் என்பவர் தயார் செய்து கொடுத்தார். வா.த.சா.ஆ–A1 மற்றும் வா.த.சா.ஆ–A2 ல் அதை தயாரித்தவர் யார் என்று அதில் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். வா.த.சா.ஆ–A1 மற்றும் வா.த.சா.ஆ–A2 ன் முத்திரை வில்லைகள் 25.10.2008 ல் வாங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இரண்டு ஆவணங்களும் ஒரே நேரத்தில் தயாரிக்கப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது என்றால் ஆமாம். அவைகளில் வா.த.சா.ஆ–A1 ல் 30.10.2008 என்றும், வா.த.சா.ஆ–A2 ல் 31.10.2008 என்றும் தேதி கைகளில் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த இரண்டு ஆவணங்களும் வெற்று தாள்களில் முன்கூட்டியே கையெழுத்து பெறப்பட்டு பின்னர் அந்த இரண்டு ஆவணங்களும் போலியாக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இரண்டு மாத காலத்தில் பத்திரங்களை நீதிமன்றத்தில் இருந்து வாங்கி தருவதாக கூறியதால் கிரய உடன்படிக்கையை பதிவு செய்யவில்லை. தாவா 2 வது அயிட்ட சொத்து சம்மந்தமாக உயில் பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வா.த.சா.ஆ–A1 ல் அசல் வழக்கு எண். 353/2001 தாக்கல் செய்யப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட்டு மேல் முறையீட்டு வழக்கு எண். 26/2005 தாக்கல் செய்து, 02.11.2005 ல் மேல் முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அதில் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 1 முதல் 10 பிரதிவாதிகளுக்குள் தாவா சொத்தில் பிரச்சனை இருப்பதால் வழக்குகள் நிலுவையில் இருப்பதை

தெரிந்து கொண்டு நான் கிரய உடன்படிக்கை செய்து கொண்டேன் என்று சொன்னால் மேல் முறையீடு முடிந்த பிறகு தான் நான் கிரய உடன்படிக்கை செய்தேன். மேல் முறையீட்டு வழக்கு நிலுவையில் உள்ளதா என்பதை தெரிந்து கொள்ளாமல் நான் அவசரமாக கிரய உடன்படிக்கை செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கான 1 கோடியே 5 லட்சத்தை நானும், சித்து ராஜ் என்பவரும் பேசி முடிவு செய்தோம். விற்பவர்கள் முடிவெடுத்து அந்த விலையை சொன்னார்கள். தாவா சொத்திற்கான சந்தை விலை 1 செண்ட் ரூ. 1,00,000/– என்றும், 1 ஏக்கர் 1 கோடி பெறும் என்றும் அதை மறைத்து கிரய உடன்படிக்கை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல (எதிர் வழக்குரையில் வழக்கு சொத்தின் சந்தை மதிப்பு பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றும், இத்தகைய கேள்வி வினவ வாதியின் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்). அரசு வழிகாட்டி மதிப்பிற்கு தனியாக கிரய உடன்படிக்கை தயார் செய்யவில்லை. சந்தையின் மதிப்பிற்கு தான் தயார் செய்தோம். சந்தை மதிப்பு 4 கோடி உள்ள சொத்தை குறைத்து 1 கோடி என்று நாங்களாகவே முடிவு செய்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ–A1 கெடு காலம் 2 மாதம் ஆகும். கெடுகாலம் முடிவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் 26.12.2008 வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தேன். அதில் எந்த தேதியில் கிரயத்திற்கு வருமாறு குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் ஆமாம். ஆனால் 3 நாட்களில் உரிய பதில் தருமாறு சொன்னோம். ஆனால் அவர்கள் தொடர்பு கொள்ளவில்லை. கெடு காலத்திற்குள் கிரயம் செய்து கொள்ள நான் தயாராக இல்லை என்று சொன்னால் சரியல்ல. 3 நாட்கள் காலக்கெடுவிற்குள் பிரதிவாதிகளுக்கு சார்வு செய்ய இயலாது என்றும், நான் நோட்டீஸ் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ–A1 கிரய உடன்படிக்கையில் நிலத்தை அளந்து காண்பிக்க வேண்டும் என்று

குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். சட்ட அறிவிப்பை சில பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டார்கள். சில பிரதிவாதிகள் பெற்றுக் கொள்ளவில்லை. அதன் பின்னிட்டு உடனடியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வா.த.சா.ஆ–A1 கெடு காலமான இரண்டு மாதத்திற்குள் நிறைவேற்றப்படாததால் அது காலவதியாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. அதன் பின்னிட்டு வா.த.சா.ஆ–A6 இரண்டாவது அறிவிப்பு கொடுத்தேன் என்றால் ஆமாம். கிரய உடன்படிக்கை காலவதியானதால் அதை புதுப்பிப்பதற்காக இரண்டாவது அறிவிப்பு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. ரூ. 20,00,000/– பிரதிவாதிகளுக்கு ரொக்கமாக கொடுத்தேன். வியாபாரத்தில் வந்த தொகையையும், வங்கியில் வைத்திருந்த தொகையையும் சேர்த்துக் கொடுத்தேன். என்னுடைய வருமான வரிக் கணக்கில் பிரதிவாதிகளுக்கு கொடுத்துள்ள ரூ. 20,00,000/– காண்பித்துள்ளேன். ரூ. 20,00,000/– வியாபாரத்தின் மூலமாக வந்ததை வைத்திருந்ததாக கூறுவது பொய்யானது என்றும், பிரதிவாதிகளுக்கு அந்த தொகையை தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ–A1 கிரய உடன்படிக்கை செய்த சமயத்தில் முழு கிரய தொகையை வைத்திருக்கவில்லை. முன் பணம் ரூ. 20,00,000/–மும் அதனுடன் சுமார் ரூ. 15,00,000/– வைத்திருந்தேன். அவ்வாறு தொகையை வைத்திருந்ததாக கூறுவது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. பண பரிவர்த்தனை ரூ. 20,000/–க்கு மேற்பட்டு காசோலை மற்றும் வரைவோலை மூலமாக தான் பரிவர்த்தனை மேற்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. முதல் அறிவிப்பு அனுப்பிய சமயத்தில் பாக்கி கிரய தொகையை கொடுக்க தயாராக இருந்தேன். அவ்வாறு நான் பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. கிரய உடன்படிக்கை காலத்திற்குள் பாக்கி கிரய தொகையை செலுத்தி கிரயம் பெற்றுக் கொள்ள நான் தயாராக இல்லை என்று

சொன்னால் சரியல்ல. அவ்வாறு பணம் வைத்திருந்த சம்மந்தமாக எந்தவிதமான ஆதாரங்களும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆமாம். வா.த.சா.ஆ–A1 இரண்டு மாத காலத்திற்குள் கிரயம் செய்ய முன் வராததால் காலவதியாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே இவ்வழக்கு காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.